**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 10** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | மருத்துவர் S. விவேக் | **S/o.(or)W/o. :** | நல்லதம்பி |
| Village : | பெரம்பலூர் | Taluk : | |
| Calling : | | Age : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **05.03.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பிரியம் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 23.01.2017 அன்று மது மருத்துவமனையில் பணிபுரிந்தபோது 62 வயதுள்ள நல்லதம்பி த/பெ. கிருஷ்ணசாமி சிகிச்சைக்கு வந்தார். அவர் ஏற்கனவே பெரம்பலூர் அரசு மருத்துவனையில் சென்று அனுமதிக்கப்பட்டு பின் மேற்சிகிச்சைக்காக மது மருத்துவமனைக்கு வந்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வலது கை, வலது கணுக்கால், வலது தோள்பட்டை சப்பை எலும்பு மற்றும் வலது கண்ணத்தில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருந்தன. அதற்கு வலது கையிலும், வலது கணுக்காலிலும் அறுவை சிகிச்சை செய்தும், வலது தோள்பட்டைக்கும், வலது கண்ணத்திற்கும் மருந்து மாத்திரைகள் மூலம் சிகிச்சை அளித்து, 02.02.2017 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவித்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வேறு மருத்துவரின் பரிந்துரையின்பேரில் மது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரவில்லை. தானாகதான் வந்தார். போலிசார் விசாரணையின்போது என்ன வகையான எலும்புமுறிவு என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. போலிசார் விசாரணையின்போது அந்த நபருக்கு சிராய்ப்பு காயங்கள், வீக்க காயங்கள் இருந்தது பற்றி ஏதும் சொன்னேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. முதுகு சப்பட்டை எலும்பு வலுவான எலும்புதான். அவ்வளவு சீக்கிரமாக உடையாது என்றால் சரிதான். அல்னா எலும்பு முறிவு இருந்தால் அவரால் கையெழுத்து போட முடியும். நல்லதம்பிக்கு இருந்தது அல்னா எலும்பு முறிவுதான். ரேடியஸ் எலும்பும் சேர்ந்து முறிந்திருந்தால், அவருக்கு வலியை பொருத்து கையெழுத்து போட முடியலாம். நல்லதம்பிக்கு முதலில் சிகிச்சை அளித்த மருத்துவரிடம் நல்லதம்பிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் கூறவில்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.